<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண். 417/2021**
<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>
**<u>வாக்குமூலம் – வா.சா.1</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணி | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | நாள் | : | 24.07.2026 |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026 ஆண்டு ஜுலை 24ம் நாள் சாட்சியம்.

---

**<u>சாட்சி மீண்டும் ஆஜர் முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

நான் இந்த வழக்கில் 1ம் வாதி ஆவேன். இவ்வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். அதனால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னுடைய கூடுதல் சத்திய பிரமாண வாக்கு மூலத்தை முதல் விசாரணையாக தாக்கல் செய்கிறேன். **14.06.1978ம் தேதியிட்ட கிரைய ஆவணம் சார்பதிவக சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும், வழக்குச் சொத்திற்கான பட்டா எண்.993 கணிணி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 21.09.2021 தேதிய அடங்கல் பசலி எண்.1430 உண்மை நகல் வா.சா.ஆ.3 ஆகவும், 21.09.2021 தேதிய ரீ.ச.எண்.102 வரைபடம் உண்மை நகல் வா.சா.ஆ.4 ஆகவும், 21.09.2021 தேதிய கூட்டு வரைடம் உண்மை நகல் வா.சா.ஆ.5 ஆகவும், 04.08.2003ம் தேதிய இ.ம.எண்.1073/2002 அ.வ.எண்.224/2003–ல் தாராபுரம் மாவட்ட உரிமையில் நீதிமன்றம் வழங்கிய உத்தரவு சான்றளிக்கப்பட்ட நகல் வா.சா.ஆ.6 ஆகவும், 04.08.2003ம் தேதிய இ.ம.எண்.1073/2002 அ.வ.எண்.224/2003–ல் தாராபுரம் மாவட்ட உரிமையில் நீதிமன்றம் வழங்கிய இறுதி உத்தரவு சான்றளிக்கப்பட்ட நகல் வா.சா.ஆ.7 ஆகவும், 03.08.2017–ம் தேதிய வாதிகளின் தகப்பனார்என்.பி.ராசப்பன் இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.8 ஆகவும்,**

**21.08.2017–ம் தேதிய வாதிகளின் தகப்பனார் என்.பி.ராசப்பன் வாரிசு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.9 ஆகவும், வாதிகளின் தாயார் தெய்வானை இறப்பு சான்றிதழ் கணணி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.10 ஆகவும், வாதிகளின் தாயார் தெய்வானை வாரிசு சான்றிதழ் கணணி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.11 ஆகவும், தாராபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.224/2003–ன் வழக்குரை நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.12 ஆகவும், தாராபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.224/2003–ன் எதிர்வழக்குரை நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.13 ஆகவும், தாராபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.224/2003–ன் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.14 ஆகவும் தாராபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் இ.ம.எண்.1073/2003, அ.வ.எண்.224/2003–ன் ஆணையர் அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.15 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

<u>முதல் விசாரணை முடிவடைந்தது.</u>

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

/ஒம் /**R**.பாண்டி மகாராஜா,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

தாராபுரம்.